1971 அக்டோபர் 22]

திரு. பெ. மலைச்சாமி : தலைவரவர்களே, தமிழ்நாட்டிலிருந்து சாமி சிலைகள் ஏராளமாகக் களவாடப்பெற்று மேல்நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன. வெளிநாட்டுக்காரர்கள் சாமிகளை அதிகமாக விரும்புகிறார்களா? அல்லது சிலையின் கலையை விரும்புகிறார்களா? கலையை விரும்பினால் நம்முடைய மகாபலிபுரத்திலுள்ள பயிற்சி நிலையத்திலிருந்து அவர்களுக்கு ஏற்ற சிலைகளை வடித்து இந்த அரசு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அவர்களெல்லாம் கலை உணர்ச்சியைத்தான் விரும்புகிறார்கள் என்று எண்ணுகிறேன். இங்கேயுள்ள முப்பத்து முக்கோடி கடவுள்களைப்பற்றி அவர்கள் கவலைப்பட மாட்டார்கள் என்று எண்ணுகிறேன் அவர்கள் விரும்புவது புதிதாக உருவாக்கப்படும் சிலைகளை அல்ல. பழமையும், சிற்பக்கலையும் உயர்ந்த சிலைகளைத்தான் விரும்புகிறார்கள்.

திரு. என். கணபதி : தலைவரவர்களே, பிற்பட்ட நலக் குழுவின் அறிக்கையில் இப்படிப்பட்ட கலைத்திறன் கொண்ட தொழில் அழியமால் இருக்க பல்வேறு நிலையங்களை உருவாக்க வேண்டுமென்று சிபார்சு செய்திருப்பதை இந்த அரசு அறியுமா? அதற்காக என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பின் தங்கிய வகுப்பு அமைச்சரைக் கேட்க வேண்டும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், மதுரையில் மதுரை வடக்கு பகுதியிலே கல் தச்சுத் தொழிலாளர்கள் என்று இம்மாதிரி கல் செதுக்கும் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு விசேஷப் பாதுகாப்பு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்தத் தொழிலில் பயிற்சி கொடுக்க பயிற்சி நிலையம் ஏற்படுத்தப்படுகிறது, நம்முடைய அரசால், யாராவது தொழில் தொடங்க முன்வந்தால் அரசாங்கம் அதைப் பரிசிலிக்கும்.

திருமதி. த. ந. அனந்தநாயகி : சார் நாதஸ்வரத்திற்குப் பயிற்சி கொடுப்பதைப் போல சிறபக் கலையைக் கற்றுக்கொள்பவர்களுக்கும் பண வசதி கொடுக்கப்படுகிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஆண்டு ஒன்றுக்கு 10 பேர்கள் இந்தப் பயிற்சி நிலையத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு மாதம் ஒன்றுக்கு 60 ரூபாய் வீதம் ஒவ்வொருவருக்கும் உதவித் தொகை கொடுக்கப்படுகிறது.

Alanganallur Co-operative Cane Growers' Association

* 23 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Industries bep leased to state

(a) whether the Government have received a copy of the resolutions passed at a meeting of the Alanganallur Co-operative Cane Growers' Association, held at Alanganallur on 16th March 1970 regarding their grievances; and

(b) if so, the details thereof and the action taken thereon?

மாண்புமிகு திரு. செ. மாதவன் :

(அ) ஆம்.

(இ) சர்க்கரை இயக்குநர், சர்க்கரை விவசாயிகள் சங்கத்தின் நிர்வாகிகளைச் சந்தித்து ஆலை நிர்வாகக் குழுவின் கொள்கைகளை விளக்கினார்.

DR. H. V. HANDE : Is it a fact that because of the glut of sugar in the market the persons who are involved in cane-growing are finding it very difficult to sell cane? If so, may I know whether the Government are going to take any steps to see that proper marketing facilities are given to the cane-growers?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, சர்க்கரை விற்பனை ஆகாமல் இருந்ததும், அதிகமாகத் தேக்கம் ஏற்பட்டதால் நமது அரசாங்கம் மத்திய அரசாங்கத்திடம் சொல்லி அதிலுள்ள சில சங்கடங்கள் நிவர்த்திக்கப்பட்டு இப்பொழுது ஓரளவு நிலைமை சரியாக இருக்கிறது. எனினும் இம்மாதிரி நிலைமைகள் ஏற்படாமல் இருக்க, விலைவாசியை எப்படி நிர்ணயிக்க வேண்டுமென்பதை மத்திய அரசாங்கத்திடம் வற்புறுத்தி வருகிறோம். ரெகவரி அதிகமாக வைத்து விலையை நிர்ணயித்தால் ரெகவரி குறைவாக உள்ள தமிழ்நாடு பாதிக்கப்படுகிறது. ஆகவே, மத்திய அரசாங்கம் இதைக் கவனத்தில் கொண்டு ரெகவரி அதிகமாக உள்ள மாநிலங்களுக்கு சலுகைகள் ஏற்படும்படியாக இந்தக் கரும்புக்கு விலையை நிர்ணயிக்காமல் நம்முடைய மாநிலங்கள் போன்ற மாநிலங்களையும் பரிசீலிக்க வேண்டும். ரெகவரி குறைந்த பேசிஸ் அளவாக எடுத்து இந்த விலையை நிர்ணயித்தால் சங்கடம் ஏற்படாது.

திரு. பி. எஸ். மணியன் : தலைவரவர்களே, அலங்காநல்லூர் கரும்பு விவசாயிகள் சங்கம் போட்ட பல தீர்மானங்களில் அந்தச் சங்கத்திற்கு, சர்க்கரை ஆலைக்குக் கொடுக்கும் கரும்பில் ஒவ்வொரு டன்னுக்கும் 10 பைசா பிடித்தம் செய்து சங்கத்திற்குக் கொடுக்க வேண்டும் என்ற தீர்மானம் இருந்ததா? அப்படியிருந்த காரணத்தால் அங்கிருக்கும் விவசாயிகள் அந்தச் சங்கத்தின் மீது நம்பிக்கையில்லாமல் அந்தச் சங்கம் கலைக்கப்பட்டு விட்டதும் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அதன் முன்னாள் தலைவர் மாண்புமிகு அங்கத்ினர் அவர்கள் இந்தச் செய்தியைத் தந்தமைக்காக நன்றி.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், கரும்பு விவசாயிகளை ரெஜிஸ்டர்ட் கேன் குரோயர்ஸ் என்றும், அன்-ரெஜிஸ்டர்ட் கேன் குரோயர்ஸ் என்றும் வைத்து ரெஜிஸ்டர்ட் கேன் குரோயர்ஸ்க்கு ஒரு விலையும், அன்-ரெஜிஸ்டர்ட் கேன் குரோயர்ஸ்க்கு ஒரு விலையும் கொடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். இந்த இரண்டு விலை வேறுபாடு இருக்கிறது. இப்படியில்லாமல் யாராக இருந்தாலும் ஒரே விலையை நிர்ணயிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

1971 அக்டோபர் 22]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்த யோசனை பதிவு செய்யப்பட்ட உற்பத்தியாளர்களுக்குப் பாதகமாக அமையும். அவர்களுக்குத்தான் முதலிடம் அளிக்க வேண்டும். ஆகவே அவர்களுக்கு விலைவாய்ப்பு கொடுக்க வேண்டும். கரும்பு விலையை எப்படி நிர்ணயிக்கவேண்டுமென்று விதி இருக்கிறது. அதன்படி நிர்ணயிக்கிறார்கள்.

மன்னியாற்றுப் பாசனம்

* 24 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மாயூரம், மணல்மேடு பகுதியிலுள்ள மன்னியாற்றுப் பாசனத்தைப் பராமரிப்பு செய்ய அரசுக்கு உத்தேசம் ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : உண்டு. மன்னியாற்றின் கடைமடைப் பாசனத்தில் தண்ணீர் பற்றாக்குறை இருப்பதால் கொள்ளிடம் கீழ் அணையிலிருந்து பிரியும் குமிக்கி மன்னியாற்றில் அதிக நீர் விடப்பட்டு மன்னியாற்றின் கடைமடைப் பகுதிக்கு அனுப்பப்படுகிறது. இதனால் மன்னியாற்றின் கடைமடைப் பாசனம் இப்போது பாதிக்கப்படாமல் இருக்கிறது.

கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே அணை

* 25 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

அணைக்கரைக்குக் கீழே கொள்ளிடம் ஆற்றில் மழைக்காலங்களிலும் வெள்ளக் காலங்களிலும் சேதமாகும் தண்ணீரை ஒரு அணை கட்டி அதன் மூலம் விவசாயத்திற்கு பயன்படுத்த ஏதேனும் திட்டம் அரசு பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

ஓட்டப்பிடாரத்தில் விவசாய ஆராய்ச்சிப் பண்ணை

* 26 வினா.—திரு. எம். முத்தையா : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஓட்டப்பிடாரம், சாலிகுளத்தில் தமிழ்நாடு அரசின் விவசாய ஆராய்ச்சிப் பண்ணை ஆரம்பிக்கும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனின், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) ஓட்டப்பிடாரம், சாலிகுளத்தில் விவசாய ஆராய்ச்சிப் பண்ணை அமைக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.